# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW3/PW3 |
| Name | : Devanathan |
| Father/Husband's Name | : Murugan |
| Village | : Thiruporur |
| Taluk | : Thiruporur |
| Calling | : Grade II PC |
| Age | : 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.10.2025.

Accused absent.S.355 Bnss filed.

**முதல் விசாரணை–**

நான் தற்போது தாம்பரம் மாநகர காவல் ஆணையகரத்தில் கிரேட் 2 பிசியாக பணிபுரிகிறேன். நான் கடந்த 27.05.2022 அன்று சைபர் கிரைம் காவல் நிலையம் செங்கல்பட்டில் பிசியாக பணியில் இருந்தபோது குற்றஎண் 18/2022 என்ற வழக்கில் மனோகரன் என்பவர் வழக்கு சம்பந்தமாக வந்து இருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக மனோகரை ஆய்வாளர் விசாரணை செய்து கொண்டிருந்தார். மனோகரனை அவருடன் பணிபுரியும் ஸ்ரீநிதியுடன் தவறாக சித்தரித்து மனோகரன் மின்னஞ்சலுக்கும் அவருடன் பணிபுரியும் சக ஊழியர்களுக்கும் மின்னஞ்சல் அனுப்பி இருந்ததாக புகார் அளித்திருந்தார். இது சம்பந்தமாக மனோகரனிடம் இருந்த மின்னஞ்சலை எங்களுடைய அலுவலக மின்னஞ்சலுக்கு அனுப்பி இருந்தார்கள் அதனை நான் பிரிண்ட் எடுத்து கொடுத்து சிடியில் காபி செய்து கொடுத்தேன். அதற்கு மறுநாள் ஸ்ரீநிதியை வரவைத்து ஆய்வாளர் விசாரித்தார். அவரிடம் இருந்த சாட்சியங்களையும் எங்களுடைய மின்னஞ்சலுக்கு அனுப்ப சொல்லி அதனை பிரிண்ட் எடுத்து சிடியில் காபி செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் பிரிண்ட் எடுத்து கொடுத்த ஆவணம். (அரசு தரப்பில் மேற்படி சாட்சி எடுத்த பிரிண்ட் மற்றும்

ஆவணங்கள் மனுதாக்கல் செய்து சமர்பிக்கப்பட்டது. அந்த மனு அனுமதிக்கப்பட்டது. ) **அந்த ஆவணம் அதசாஆ 3 (6 பக்கங்கள்) ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் இரண்டு சிடிக்கள் நான் கொடுத்தது தான். அவை **அதசாஆ 4 (2 எண்ணிக்கை) ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** மேலும் என்னிடம் காட்டப்படும் 65 பி சான்றிதழ் நான் அளித்தது தான். மனோகரன் என்பவரிடமிருந்து nalinmerlin@gmail.com என்ற முகவரியிலிருந்து ccpscpt2021@gmail.com மின்னஞ்சல் அனுப்பபட்ட அதற்காக 65 பி சான்றும் கொடுத்தேன். **அது அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதற்கு மறுநாள் ஸ்ரீநிதியை விசாரணை செய்யும்போது அவருடைய மின்னஞ்சல் shinidhar@gmail.com என்ற எங்கள் அலுவலக மின்னஞ்சலான ccpscpt2021@gmail.com அனுப்பபட்டது அதை பிரிண்ட் எடுத்து 65 பி சான்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் 65 பி ஆவணம் அது தான். **அது அதசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

என்னிடம் காட்டப்படும் தர்ஷினி என்ற பெயருள்ள சிடியில் நான் பதிவு செய்தற்காக அடையாளம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மனோகரன் சிடியில் என்னுடைய கையெழுத்திற்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன சிடிக்கள் என்னால் பதிவிறக்கம் செய்யவில்லை என்றாலும் என் ஆய்வாளரின் துணையுடன் பின்னிட்டு ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் ஆம் அவ்வாறு விசாரித்தபோது

*"குற்றஎண் 18/2022 என்ற வழக்கில் மனோகரன் என்பவர் வழக்கு சம்பந்தமாக வந்து இருந்தார் என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக மனோகரை ஆய்வாளர் விசாரணை செய்து கொண்டிருந்தார் என்றும் மனோகரனை அவருடன் பணிபுரியும் ஸ்ரீநிதியுடன் தவறாக சித்தரித்து மனோகரன் மின்னஞ்சலுக்கும் அவருடன் பணிபுரியும் சக ஊழியர்களுக்கும் மின்னஞ்சல் அனுப்பி இருந்ததாக புகார் அளித்திருந்தார் என்றும் இது சம்பந்தமாக மனோகரனிடம் இருந்த மின்னஞ்சலை எங்களுடைய அலுவலக மின்னஞ்சலுக்கு அனுப்பி இருந்தார்கள் "*

என்ற விவரத்தை நான் போலிஸ் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அவ்வாறு கூறவில்லை என்றாலும் நான் தற்போது வழக்கை வலுபடுத்தவும் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவலர் காவல் நிலையத்தில் பணியில் சேரும்போது அவர்க்கு என்ன பணி என்பது குறித்து அலுவலக உத்தரவு ஒன்று

பிறப்பிக்கப்படும் என்றால் சரிதான். Duty roaster இருக்கும். நான் பணிமாறுதல் ஆகி செல்லும்போது என்ன என்ன பொருட்கள் எனது பொருப்பில் இருந்ததை ஒப்படைத்தேன் என்பதற்காக ஆவணம் காவல் நிலையத்தில் இருக்கும் என்றால் சரிதான். நான் பாக்கெட் நோட் ஒன்று மெயின்டேன் செய்து அதில் என்ன என்ன பணிகள் செய்தேன் என்ற குறிப்புகளை குறித்து வைத்து ஆய்வாளரிடம் கையெழுத்து பெற்று ஒப்படைப்பேன் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களை பார்த்தால் நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரங்கள் உண்மையா என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போல சம்பவம் நடக்கவில்லை என்றாலும் உயர் அதிகாரிகள் கேட்டு கொண்டதன் பேரில் நடைபெறாத சம்பவங்களை நடைபெற்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டிய ஆவணங்கள் இன்றைய தினம் தான் நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டிய ஆவணங்கள் இன்றைய காலை வழக்கிற்கு ஏற்றாற் போல் ஜோடிக்கப்பட்டவை என்றாலும் அதற்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அவை சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
(SD/-)V.LAVANYA,
Judicial Magistrate No.I,
Chengalpattu.